

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, நேற்று (27.11.2024) படுகர் இன மக்கள் தங்களுடைய பாரம்பரிய உடையை அணிவித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

முதல்வரின் உத்தரவுக்கேற்ப கழக உறுப்பினர்கள் அவையில் காரசாரமாக விவாதிக்க இருக்கிறார்கள்!

# தமிழ்நாட்டின் குரல் டெல்லியில் ஓங்கி ஒலிக்கும்!

## “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 28 -

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கேற்ப கழக உறுப்பினர்கள் அவையில் காரசாரமாக விவாதிப்பார்கள். இனி தமிழ்நாட்டின் குரல் டெல்லியில் ஓங்கி ஒலிக்கும் என “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

நாடாளுமன்றத்தின் இந்த ஆண்டுக்கான இறுதி கூட்டம் குளிர்கால கூட்டத்தொடராக கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. டிசம்பர் மாதம் 20ந்தேதி வரை நடக்க இருக்கும் இந்தக் கூட்டத்தொடரில் 16 முக்கிய மசோதாக்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. எனவே, விவாதங்களின்போது அவையில் அனல் பறக்கும்.

சமீபத்தில் நடந்து முடிந்த மராட்டியம், ஜார்கண்ட் மாநிலங்களில் நடந்த தேர்தல் முடிவுகள், அதானி விவகாரம், மணிப்பூர் கலவரம், வெங்காயம் உள்ளிட்ட உணவு பொருட்களின் விலை உயர்வு, ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா போன்ற பல விவகாரங்கள் அவையில் எதிர்க்கட்சிகளால் எழுப்பப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அதுபோலவே, முதல் நாள் கூட்டத்தில் அதானி மற்றும் மணிப்பூர் கலவர விவகாரங்கள் எழுப்பப்பட்டு கடும் அமளி ஏற்பட்டதால் இரு அவைகளும் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்ற கூட்டம் தொடங்குவதற்கு முன்பு, பிரதமர் நரேந்திரமோடி செய்தியாளர்களிடம் பேசும்போது, “மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் ஒரு சில உறுப்பினர்களைக் கொண்டு அராஜக முறையில் அவை நடவடிக்கைகளை சீர்குலைக்க தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் அவர்கள் செயல்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சமயம் வரும் போது அவர்களை மக்கள் தண்டிக்கிறார்கள்” என்று மராட்டிய தேர்தல் முடிவுகளை மனதில் வைத்து கடுமையாக சாடினார்.



தலையங்கம்

தினத்தந்தி

27.11.2024

தமிழ்நாட்டின் குரல் ஓங்கி ஒலிக்கும்!

மேலும், “நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் நடக்கவேண்டும். அதிக அளவில் உறுப்பினர்கள் விவாதங்களில் கலந்துகொள்ளவேண்டும். துரதிர்ஷ்டவசமாக சில உறுப்பினர்கள் தங்கள் அரசியல் லாபத்துக்காக அமளியை ஏற்படுத்தி அவை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடைஞ்சல் ஏற்படுத்த முயன்று வருகிறார்கள்” என்றும் அவர் பேசினார்.

தமிழ்நாட்டைப் பொருத்தமட்டில், மொத்தம் உள்ள 39 உறுப்பினர்களும் தி.மு.க கூட்டணியைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். மாநிலங்களவையிலும் ‘இந்தியா’ கூட்டணிக்கு 12 உறுப்பினர்கள், அதாவது தி.மு.க.வுக்கு 10, காங்கிரசுக்கும், ம.தி.மு.க.வுக்கும் தலா ஒரு உறுப்பினர்கள் என இருக்கிறார்கள். அ.தி.மு.கவுக்கு 4 உறுப்பினர்களும், பா.ம.கவுக்கு ஒரு உறுப்பினரும், தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) கட்சிக்கு ஒரு உறுப்பினரும் இருக்கிறார்கள். குளிர்கால கூட்டத்தொடருக்கு முன்பு தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தைக் கூட்டிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள் “இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மாநில உரிமை, நிதி உரிமையை காக்க நாடாளுமன்றத்தில் முழங்குவோம் என்ற தீர்மானத்திற்கேற்ப அந்த குரலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்ப வேண்டும், மென்மையாக பேசக்கூடாது, கடுமையாக பேசவேண்டும்” என்று கட்டளையிட்டார்.

முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கேற்ப இந்தக் கூட்டத்தொடரில் தி.மு.க. உறுப்பினர்கள் நாள்தோறும் தங்கள் விவாதத்தில் தமிழகத்தின் கோரிக்கைகளுக்காக புயலை கிளப்புவார்கள். சாதிவாரி கணக்கெடுப்பு, ‘நீட்’ பிரச்சினை, மீனவர் பிரச்சினை, மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை தாமதம், புதிய கல்வி திட்டத்தின் அடிப்படையில் ‘சமக்ரா சிக் ஷா’ திட்டத்தின் மூலம் தமிழகத்துக்கு வர வேண்டிய நிலுவைத் தொகை, ஜி.எஸ்.டி வரியை அமல்படுத்துவதால் ஏற்பட்ட வருவாய் இழப்புக்கு இழப்பீடு, ரெயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு, வக்பு வாரிய திருத்த சட்டத்தை திரும்ப பெறுதல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த பெரிய நிறுவனங் களை தமிழ்நாட்டில் தொடங்குதல், அதுவரையில் படித்து முடித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு நிதி யுதவி, ஒரே நாடு ஒரே தேர்தல் வேண்டாம், மணிப்பூர் பிரச்சினை போன்ற 11 பிரச்சினைகளை முன்னிறுத்தி தி.மு.க. உறுப்பினர்கள் அவையில் காரசாரமாக விவாதிக்க இருக்கிறார்கள். இதைத்தான் தமிழ்நாடும் எதிர்பார்க்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்திய அரசியலமைப்புச் சட்ட தினத்தன்று, நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், ‘ சோஷலிச’ (Socialist ), ‘மதச்சார்பற்ற’ ( Secular ), என்ற மிக முக்கியமான சித்தாந்தக் குறியீடுகளை உணர்த்தும் இரண்டு சொற்களையும் தவிர்த்து விட்டாராமே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; குடியரசுத் தலைவர் உரையைத் தயாரிப்பது ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் அல்லவா! அவர்களுக்கு அந்த சித்தாந்தங்களில் நாட்டமோ, நம்பிக்கையோ இருந்தால்தானே !**

**சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் !**

கோவை மாநகராட்சி

# மாமன்ற உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 28 -

**கோவை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி விபத்தில் உயிரிழந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறேம். இச்செய்தியறிந்ததும், முதல்வர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கோவை மாநகராட்சி 56ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விபத்தில் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர்க்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.





துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் நலத்திட்ட உதவி மற்றும் உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் ஏற்பாட்டில் திருத்தணியில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்துகொண்டு தூய்மை பணியாளர்களுக்கு மற்றும் ஆட்டோ ஓட்டுநர் பெண்களுக்கு மற்றும் இளைஞர்களுக்கு புத்தகம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம்.பூபதி, நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், இ.குருதாஸ், எம்.மிதுன் சக்ரவர்த்தி, வி.கிஷோர், ராஜேஸ்வரி ரவீந்திரநாத், கே.என்.சுப்பிரமணி, வி.வினோத் குமார், கூளூர் எம்.ராஜேந்திரன், சி.ஜெ.சீனிவாசன், என்.கிருஷ்ணன், பிடி.சந்திரன், பெ.பழனி, சி.என்.சண்முகம், கே.ராஜேந்திரன், டி.ஆர்.கே.பாபு, நகர மன்ற துணை தலைவர் சாமிராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன், உள்பட பலர் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# வேளச்சேரி 176 அ வட்டத்தில் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

## வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில்!

சென்னை, நவ.28 -

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 176 அ வட்டக் கழகத்தின் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் விழாவை சிறப்பிக்கும் வகையில் மாவட்ட செயலாளரும், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, நேற்று (27.11.2024) காலை 1000 மணியளவில் விஜயநகர் 1வது பிரதான சாலையில் வட்ட செயலாளர் கே.என். தாமோதரன் தலைமையில் பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், வே.ஆனந்தம் எம்.சி. முன்னிலையில் கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்த இனிய நிகழ்வில் மாவட்ட கழக,பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாகமுகவர்கள் செயற்க்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் கழக வழக்கறிஞர் அணியினர் சார்பாக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ்குமார் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். உடன் கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உதய நாள் பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பின்படி, சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி பெருங்குடி 182–வது வட்டத்தில் வட்டச் செயாளர் அன்பின் மா.ஆறுமுகம் தலைமையில் பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வி.பி.இராசன், விஜயகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார். உடன் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏழுமலை, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழகத்தினர் பெருமளவில் கலந்து கொண்டனர். வி.வெங்கடேசன் நன்றி கூறினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! எஸ்.பி.கோதண்டம் தலைமையில்

# 142 (அ) வட்டத்தில் தெருமுனை கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

## சரத்பாலா - ரா.யோகஸ்ரீ சிறப்புரை- தமிழச்சிதங்கபாண்டியன் - மு.மகேஷ்குமார்- பரிதி இளம்சுருதி பங்கேற்பு!

சென்னை, நவ. 28 -

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி 142வது (அ) வட்ட தி.மு.க சார்பில் நவம்பர் 27 மனித நேய உதய நாள் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி தெரு முனை கூட்டம் 29.11.2024 வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சைதாப்பேட்டை சுப்பரமணிய சாலையில் மாபெரும் தெருமுனை கூட்டம் வட்ட கழக செயலாளர் எஸ்.பி. கோதண்டம் தலைமையிலும், பகுதிச் செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை மா.அன்பரசன், வழக்கிறஞர் எம்.ஸ்ரீதரன், எம்.சி, முன்னிலையிலும், ஆர்.ரமேஷ், வட்ட செயலாளர் எம்.நாகா, மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.எல்.செல்வம், பொன்ஜெய்சிங், பால்கார் ரவி, வட்டக் கழக நிர்வாகிகள் எம்.ஷேக்தாவூத், ஆர்.எல்.காந்தன், பி.தேவிகா, பி.வரதராஜன், ஆம்பூர்ரவி, எஸ்.பாரதிபாஸ்கர், வே.பிரபு ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமை கழக பேச்சாளர்கள் சரத்பாலா, ரா. யோகஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்றுகின்னர்.

மேலும் இக்கூட்டத்திற்கு முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார், மாவட்ட அவை தலைவர் எஸ்.குணசேகரன், தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம்சுருதி, எம்.சி, பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், கவிதாகெளதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள், சை. மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன் மற்றும் சைதைசாதிக், ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண் டன், எம்.எஸ்.அரிபாபு, அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ.எஸ்.பழனி, எம்.எஸ்.பழனி, டி.எஸ்.ரவிச்சந்திரன், என்.சம்பந்தம், கு.கார்த்திகேயன், வெ.கிஷோர் குமார், கே.தாஸ், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், அ.தமீம்அன்சாரி, தீ.ராஜ்குமார், மாவுமில்ஸ்ரீதர், எம்.மாறன், பகுதி அமைப்பாளர்கள் த.மணி, ஜி.ஜே. மோசஸ், ஆர்.எஸ்.ரமேஷ், கோயில் எஸ்.மணி, ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, ஆட்டோஜான், இரா.பாபு, பிடிசி குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்பிரபு, இரா.வெங்கடேசன், ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, வது வட்ட நிர்வாகிகள் ஆர் பார்முனுசாமி, எப்.சாகுல்அமீது, கேபிள் எம்.முருகன், ஆர்.கோபி, எம்.கதிர், கே.முருகேசன், வி.பி.காந்தி, கே.விஜய், ஆர்.மோகன், கே.கசாலி, அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள் கே.அன்சர்கான், ஜி. உதயகுமார், கே.நரேஷ், ஆர்.வாசு, ஆர்.சசி, எ.ரகு, பெரியண்ணன், இந்து உதயா, எம்.ரவி, எஸ்.ரமேஷ், எம்.பெருமாள், ஆர்.டி.மூர்த்தி, ஜே.சம்பத், கேபிள்மணி, ராமு, சுரேஷ், கார்த்திக், முத்து, வட்ட செயற்குழு உறுப்பினர்கள் பி.சிவகுருநாதன், எஸ்.தமிழ்ச்செல்வன், ரூபேஷ் குமார், அன்புசெழியன், எஸ்.செல்வம், சுரேஷ், சதிஷ், தினேஷ்ராம், எஸ்.விஜயகுமார், ஆர்.செல்வம் உள்ளிட்ட கழக முன்னோடிகள் பெருதிரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இக்கூட்டத்தின் நிறைவாக வட்ட துணை செயலாளர்கள் கே.சி.பழனிபாரதி, வீடியோ எஸ்.எழில், பகுதி பிரதிநிதி எம்.பாலாஜி ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.




திருவொற்றியூர் சார்பு நீதிமன்ற நுழைவாயில் முன்பு ‘இந்திய அரசியலமைப்பு’ முகப்புரை வாசிப்பு சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ் தலைமையில் நடைபெற்றது.